**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC **.No.** 38/2026

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 08–ம் தேதி புதன்கிழமை அ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அ.சா.** | : | 1 | | | |
| **பெயர்** | : | **சரவணன்** | **தொழில்** | : | **செயல்அலுவலர்** |
| **த/பெ.** | : | **சண்முகம்** | **வட்டம்** | : | அரியலூர் |
| **கிராமம்** | : | அரியலூர் | **வயது** | : | 45 |

**08.07.2026**

**(1, 2 எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது அருள்மிகு கோதண்டராசாமி திருக்கோவிலில் செயல் அலுவலராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். என்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள வாலாஜாநகரம் அருள்மிகு காடைபெருமாள் திருக்கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் ஆஜர் எதிரிகள் அத்துமீறி நுழைந்ததாக அந்த கோவிலின் முன்னால் அறங்காவலர் முருகேசன் என்பவர் எனக்கு போன் செய்து தகவல் தெரிவித்தார். 16.10.2024 அன்று காலை 09.00 மணிக்கு நான் அங்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரிகள் ஏற்கனவே வேறு ஒருவர் விதைத்திருந்த நிலத்தில் மீண்டும் பயிர் விதைக்க நிலத்தில் ஆஜர் எதிரிகள் இறங்கினார்கள். நான் ஆஜர் எதிரிகளிடம் இது கோவிலுக்கு சொந்தமான நிலம் இதை வேறு ஒருவருக்கு நான் குத்தகைக்கு விட்டுவிட்டேன். நீங்கள் நிலத்தை விட்டு வெளியே வாருங்கள் என்று சொன்னேன். அறங்காவலர் முருகேசன் மகன் ராஜா என்பவரும் என்னுடன் இருந்தார். ஆஜர் எதிரிகள் அப்போது

மது போதையில் இருந்தார்கள். ஆஜர் எதிரி தங்கராசு என்னிடம் இது எங்க தாத்தா நிலம் நீங்க யாரு கேக்குறதுக்கு என்று சொல்லி என்னை திட்டினார். நிலத்திற்கு வருவதற்கு முன்பு ஆஜர் எதிரிகள் கோவிலுக்கு சொந்தமான மண்டபத்தின் பூட்டை உடைத்து பொருட்களை சேதப்படுத்தி விட்டோம் என்று எதிரிகள் என்னிடம் சொன்னார்கள். மேலும் ஆஜர் எதிரி தங்கராசு என்னிடம் அந்த மண்டபத்திலிருந்து கத்தியை எடுத்து வந்து உன்னை குத்திவிடுவேன் என்று சொன்னார். அதன் பிறகு நான் 100-க்கு கால் செய்து போலீசை வரவழைத்தேன். போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்த்துவிட்டு அங்கு இருந்த அருவாளை கைப்பற்றினார்கள். அன்றே காவல் நிலையம் சென்று கைப்பட எழுதிய புகாரை கொடுத்தேன். மீண்டும் 18.10.2024 அன்று டைப் செய்த புகாரை கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்-I,
அரியலூர்.

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 08–ம் தேதி புதன்கிழமை அ.சா. 2– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **அ.சா.** : 2 | | | |
| **பெயர்** : **ராஜா** | | **தொழில்** : **டீ கடை நடத்தி வருகிறேன்** | |
| **த/பெ.** : **முருகேசன்** | | **வட்டம்** : அரியலூர் | |
| **கிராமம்** : வாராஜாநகரம் | | **வயது** : 43 | |

**08.07.2026**

**(1, 2 எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலாஜாநகரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது டீ கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–ஐ தெரியும். என் அப்பா முருகேசன் காடைபெருமாள் கோவிலில் அறங்காவலர் உறுப்பினராக உள்ளார். 16.10.2024 அன்று கோவிலில் பிரச்சனை நடந்து கொண்டிருப்பதாக என் அப்பாவிற்கு போன் வந்தது. என் அப்பா அ.சா.1 சரவணனுக்கு போன் செய்து அவர் வந்தவுடன் என்னையும் அவருடன் போக சொன்னார். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் உட்கார்ந்து இருந்தார்கள். ஏன் இங்கு உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று நானும் அ.சா.1 னும் கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் இருவரும் கோவில் எங்களுடையது என்று சொல்லி போதையில் திட்டினார்கள். கோவிலின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அதைபற்றி கேட்டதற்கு ஆஜர் எதிரி தியாகராஜன் நான்தான் பூட்டை உடைத்தேன் என்று சொன்னார். பின்னர் 100–க்கு போன் செய்தவுடன் போலீசார் வந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

**2026 – ம் ஆண்டு ஜூலை மாதம் 08–ம் தேதி புதன்கிழமை அ.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அ.சா.** | : | 3 | | | |
| **பெயர்** | : | **மகாராஜன்** | **தொழில்** | : | **விவசாயம்** |
| **த/பெ.** | : | **கோவிந்தசாமி** | **வட்டம்** | : | அரியலூர் |
| **கிராமம்** | : | குறிச்சிநத்தம் | **வயது** | : | 70 |

<u>08.07.2026</u>

**(1, 2 எதிரிகள் ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குறிச்சிநத்தத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–ஐ தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. நான் எனது நிலத்தில் இருந்தபோது பக்கத்தில் உள்ள காடைபெருமாள் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் சத்தம் கேட்டது. கோவில் பூட்டு உடைந்திருந்தது. அப்போதுஆஜர் எதிரி தங்கராசு அ.சா.1, அ.சா.2–ஐ கண்ணாபிண்ணா என்று திட்டிக்கொண்டிருந்தார். பின்னர் கத்தி, அருவாள் ஆகியவற்றை எடுத்து அ.சா.1, அ.சா..2–ஐ தங்கராசு வெட்டப்போனார். அதன் பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மறு விசாரணை**

இல்லை.

(ஓம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.